(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
9 சைவசமய பாடப்பரீட்சை : 2025
தரம் ஒன்பது



www.nselva.com

காலம் அளவு	2.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. திருக்கார்த்திகை விளக்கீட்டு விழா விசேடமாக நடைபெறும் தலம்?
   1) திருவண்ணாமலை 2) திருச்செந்தூர்
   3) சிதம்பரம் 4) சீர்காழி
2. 'துஞ்சலும் துஞ்சல்.....' என்னும் பதிகம் இடம்பெறும் திருமுறை.
   1) முதலாந் திருமுறை 2) இரண்டாந் திருமுறை
   3) மூன்றாம் திருமுறை 4) நான்காம் திருமுறை
3. சைவப்புலவர் அருணாசல தேசிகருக்கு அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் வழங்கப்பட்ட பட்டம்.
   1) தேசிகமணி 2) சித்தாந்தசிகாமணி
   3) புலவர்மணி 4) பண்டிதமணி
4. துறவுக்கு ஆயத்தமாகும் நிலை.
   1) பிரமச்சரியம் 2) கிருகஸ்தம்
   3) வானப்பிரஸ்தம் 4) சந்நியாசம்
5. இறந்த தந்தைக்குப் பிதிர்க்கடன் செய்யும் தினம்.
   1) சித்திராபௌர்ணமி 2) பௌர்ணமி
   3) மகாமகம் 4) ஆடிஅமாவாசை
6. ''யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்று கூறியவர்.
   1) திருமூலர் 2) பட்டினத்தார் 3) நாவலர் 4) சேந்தனார்
7. ''காப்பதோர் வில்லும்....." என்னும் பதிகத்தில் விவரிக்கப்படும் நாயனார்.
   1) சிறுத்தொண்டர் 2) கண்ணப்பர் 3) திருநீலகண்டர் 3) இயற்பகை
8. இருபத்தேழு நட்சத்திரங்களில் பதினோராவது நட்சத்திரம்.
   1) பரணி 2) திருவாதிரை 3) அச்சுவினி 4) பூரம்
9. பட்ச விரதங்களில் ஒன்று.
   1) பிரதோஷம் 2) கார்த்திகை 3) நவராத்திரி 4) உத்தரம்
10. சிவபெருமான் மன்மதனை எரித்த தலம்.
   1) பழனி 2) திருக்குறுக்கைவீரட்டம் 3) சிதம்பரம் 4) ஸ்ரீரங்கம்
11. 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' எனப் போற்றப் பெறுபவர்.
   1) ஔவையார் 2) மங்கையர்க்கரசியார் 3) ஆண்டாள் 4) திலகவதியார்

12. வீதி விடங்கப்பெருமான் வீற்றிருக்கும் தலம்.
1) திருச்செந்தூர் 2) சிதம்பரம் 3) திருவாமூர் 4) திருவாரூர்

13. நம்மாழ்வாரையே திருமாலாகக் கருதிப் பாடிப் பரவியவர்.
1) மதுரகவியாழ்வார் 2) திருமங்கையாழ்வார் 3) ஆண்டாள் 4) பெரியாழ்வார்

14. சரியை நெறி நின்று அருள் பெற்றவர்.
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

15. 'அன்பேசிவம்' என்று கூறும் நூல்.
1) திருக்குறள் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) திருமந்திரம்

16. அடியார் வழிபாடு எனப் படுவது
1) குருவழிபாடு 2) இலிங்கவழிபாடு 3) சங்கமவழிபாடு 4) தோத்திரவழிபாடு

17. கதிர்காமப் பாதயாத்திரை ஆரம்பிக்கும் முருகன் தலம்.
1) செல்வச்சந்நிதி 2) நல்லூர் 3) மண்டூர் 4) வெருகல்

18. ''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்று பாடியவர்.
1) ஆறுமுகநாவலர் 2) சுவாமி விபுலாநந்தர்
3) திருமூலர் 4) யோகர்சுவாமிகள்

19. புறாவுக்காக தன்னுடலைத் தியாகம் செய்த மன்னன்.
1) பேகன் 2) பாரி 3) சிபி 4) கர்ணன்

20. பஞ்சபுராணங்களில் மூன்றாவதாகப் பாடப்படுவது.
1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) திருப்பல்லாண்டு

21. ஆன்மா பல பிறவிகளிலும் செய்த நல்வினை தீவினைப் பயன்களின் தொகுதி.
1) சஞ்சிதம் 2) பிராரத்தம் 3) ஆகாமியம் 4) எதிர்வினை

22. உலகம் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் அடிப்படையானது.
1) ஆணவம் 2) கன்மம் 3) மாயை 4) மூலமலம்

23. திருஞானசம்பந்தராலும் சுந்தரராலும் பாடல் பெற்ற தலம்.
1) திருக்கோணேஸ்வரம் 2) நகுலேஸ்வரம்
3) முன்னேஸ்வரம் 4) திருக்கேதீஸ்வரம்

24. 'தமிழ் ஆகமம்' எனப் போற்றப்படும் நூல்.
1) திருக்குறள் 2) தேவாரம் 3) திருவாசகம் 4) திருமந்திரம்

25. சந்தப்பாடல்கள் நிரம்பப் பெற்ற நூல்.
1) திருப்பல்லாண்டு 2) திருப்புகழ் 3) திருவாசகம் 4) திருமந்திரம்

26. யானை முகத்தையுடைய கடவுள்.
1) கணேசமூர்த்தி 2) சதாசிவமூர்த்தி 3) முருகமூர்த்தி 4) திருமால்

27. ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் தலம் அமைந்துள்ள ஊர்.
1) நீர்வேலி 2) காரைநகர் 3) நல்லூர் 4) வல்லிபுரம்

28. பொன்னம்பலவாணேச்சரத்தில் வீற்றிருக்கும் இறைவியின் திருநாமம்.
1) மாதுமை அம்பாள் 2) கௌரி அம்பாள்
3) வடிவாம்பிகை 4) சிவகாமி அம்பாள்

29. செல்வச்சந்நிதி முருகனின் சிறப்புப்பெயர்.
1) அன்னதானக்கந்தன் 2) கர்ப்பூரக்கந்தன்
3) அலங்காரக்கந்தன் 4) அபிடேகக்கந்தன்

30. வண்ணை வரதராஜப் பெருமாள் ஆலய விருட்சம்.
1) வன்னிமரம் 2) பலாமரம் 3) வில்வமரம் 4) அரசமரம்

(30x1 = 30 புள்ளிகள்)

பகுதி - II

ஆ. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. சைவசமயத்தின் பொது நூல் யாது?
2. ஐயப்ப பக்தர்கள் எத்தனை நாட்கள் விரதமிருப்பர்?
3. திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலை இயற்றியவர் யார்?
4. அறுபத்தைந்து ஆலம் இலைகளில் பச்சையரிசிப் பொங்கல் படைக்கப்படும் முருகன் ஆலயம் யாது?
5. கதிர்காமத் திருத்தலத்தின் தீர்த்தத்தின் பெயர் யாது?
6. தன்னுடல் வருத்தத்தைப் பாராது கைலைக் காட்சியைக் கண்ட நாயனார் யார்?
7. திருமந்திரத்தில் அடங்கியுள்ள தந்திரங்களின் எண்ணிக்கை யாது?
8. திருஞானசம்பந்தரின் திருமணம் நடைபெற்ற தலம் யாது?
9. ஐந்தாம் குரவர் எனப்போற்றப்படுபவர் யார்?
10. ஆடிப்பூரம் எக்கடவுளுக்கு உகந்த தினம்?
11. சுந்தரமூர்த்திநாயனர் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?
12. பஞ்சாட்சரத்தை எந்தத் திக்குமுகமாக இருந்து செபித்தல் வேண்டும்.
13. பாலைநிலத்தை நெய்தல் நிலம் ஆகும்படி பாடியவர் யார்?
14. வெள்ளையானையில் ஏறித் திருக்கைலாசம் சென்றவர் யார்?
15. திருநாவுக்கரசு நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?

(15 புள்ளிகள்**)**

பகுதி - III

1. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் <u>இரண்டினை</u> அடிமுறை பிழையாது எழுதுக.

1. "இல்லக விளக்கது ....."
2. "மற்றுப் பற்று எனக்கு ....."
3. "போற்றியோ நமச்சிவாய....."
4. "சிவனொடு ஒக்கும ....."

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் குறட்பாக்களை எழுதுக.

1. "அடக்கம் அமரருள் ....."
2. "யாகாவார் ஆயினும் ....."
3. "ஒழுக்கம் விழுப்பம் ....."
4. "ஒழுக்கம் உடைமை ....."
5. "பிறன் பொருளான் பெட்டு ....."

(5 புள்ளிகள்**)**

பகுதி - IV

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1.
1. பஞ்சாங்கத்தின் உறுப்புக்கள் யாவை?
2. நமது நாட்டில் பயன்படுத்தப்படும் பஞ்சாங்கங்கள் யாவை?
3. பஞ்சாங்கம் பார்த்து செய்யும் காரியங்கள் மூன்று எழுதுக.
4. மனிதரிடம் இருக்கவேண்டிய வேண்டிய நற்பண்புகளில் மூன்றை எழுதுக.
5. இல்லறத்தில் ஒருவர் செய்யும் பிதிர் வழிபாடுகள் யாவை?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

2.
1. ஆவணிச் சதுர்த்தி விரதம் எவ்வாறு அனுட்டிக்கப்படும்?
2. கேதாரகௌரி விரதம் என்ற பெயர் பெற்றமைக்கான காரணம் யாது?
3. விஜயதசமி அன்று நடைபெறும் நிகழ்வுகள் யாவை?
4. உத்தராயணம், தட்சணாயணம் என்றால் என்ன?
5. கதிர்காமத்திற்குப் பாத யாத்திரை சென்ற சித்தர்கள் யாவர்?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

3. 1. சரியைத் தொண்டுகள் நான்கு எழுதுக.
2. கிரியைநெறிக்கான உபகரணங்கள் மூன்று தருக.
3. அட்டாங்கயோகத்தில் அடங்கும் உறுப்புகளில் நான்கை எழுதுக.
4. ஞானநெறியில் முத்தியடைந்த நாயனார் யார்?
5. தாசமார்க்கம் என்றால் என்ன?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

4. 1. ஈழநாடு சிவபூமி என திருமூலரால் அழைக்கப்பெற்றமைக்கான காரணம் யாது?
2. சிவன் என்ற அடைமொழியுடன் பெயர் வைத்திருந்த மூன்று மன்னர்கள் யாவர்?
3. சோழர் காலத்தில் இலங்கையில் கட்டப்பட்ட மூன்று சிவாலயங்களின் பெயர்களை எழுதுக.
4. பிராமணக் குடியிருப்புக்கள் எப்பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டன.
5. பண்டுகாபயன் சைவசமயத்துக்கு ஆற்றிய பணி யாது?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

5. 1. நாட்டார் தெய்வங்களைக் குறிக்கும் மறுபெயர்கள் நான்கு எழுதுக.
2. சிவபிராமனை அவமதித்த தக்கன் யாகத்துக்கு நடந்தது யாது?
3. ஐயனார் எவ்வாறு உதித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன?
4. காத்தவராயர் பற்றி தமிழகத்தில் நிகழும் கதையை எழுதுக.
5. இலங்கையில் காத்தவராயர் பற்றி நிகழும் கதையை எழுதுக.

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

6. எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
1. ஆணவம்
2. ஆடிப்பிறப்பு
3. மங்கையார்கரசியார்
4. கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம்

(2 x 5 = 10 புள்ளிகள்**)**